யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை
பருத்தித்துறை

# வருடாந்த
# பரிசளிப்பு விழா
# 2013 / 2014

தலைவர்
செல்வி.G.D.தேவராஜா
(அதிபர்)

பிரதம விருந்தினர்
திருமதி.T.இரட்ணம்
(தலைவர், பழைய மாணவர் சங்கம் கொழும்புக்கிளை)

# யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை

## வருடாந்த பரிசளிப்பு விழா

**2013 / 2014**

**தலைவர்**

**செல்வி.G.D.தேவராஜா**

**[அதிபர்]**

**பிரதம விருந்தினர்**

**திருமதி.T.இரட்ணம்**

**[தலைவர், பழைய மாணவர் சங்கம் கொழும்புக்கிளை]**

# J/Methodist Girls' High School

# ANNUAL PRIZE GIVING 2013/2014

**PRESIDENT**

**Miss.G.D.Thevarajah**

(Principal)

**CHIEF GUEST**

**Mrs.T.Ratnam**

(President, Old Girls Association, Colombo Branch)

# பாடசாலைக்கீதம்

**பல்லவி**

கல்வியன்னை மீதே கவிகள் பாடுவோம்
கலைகள் பல கனிந்து சொரியும் காரணம் கலாசாலை
(கல்வி)

பருத்தித்துறை பெயர் புனையும் பாங்குறு நம் நகரில்
பண்புடன் ஒளிருமன்னை பாதை பேணும் தீபமாம்
(கல்வி)

**சரணம்**

ஓங்கி நல்வளர் உயர்பனை மரமும்
ஒளிதனைப் பரப்பிடும் கலங்கரை விளக்கமும்
உயிர்கள் பல வாழும் கடல் தனையும் கொண்ட
எங்கள் பாடசாலை இன்ப சின்னம் நினைந்து
(கல்வி)

எண்ணுமெழுத்தும் கண்ணெனத்தழுவி
நுண்ணிய விஞ்ஞானமும் செந்தமிழ் சங்கீதமும்
மாண்புறுமனையியல் ஓவியம் சரித்திரம்
மகிழ்ச்சியூட்டும் உடற்பயிற்சி மற்றும் கலைதான் கொண்ட
(கல்வி)

பல் சிறார்களும் பாங்குடன் கூடி
பண்ணரிய ஒற்றுமை பூண்டோர் அன்னை சேய்கள் போல்
பொற்சுடராம் நல்லறிவைப் போற்றி நாட்டிற் சேவை செய்ய
பொற்பரனின் பாதமேற்றி வாழ்க என்றும் வாழ்கவே.
(கல்வி)

## SCHOOL SONG

The lamps to light all mankind
From darkness fear and doubt
Lift up to height celestial
and onward towards the light
Gleaming with love and service
Tread we though frail and weak
Onward upward proceed we
Towards the light we seek

# யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை

# பரிசளிப்பு விழா 2013 / 2014

## அதிபர் அறிக்கை

வணக்கத்துக்குரிய சமயத் தலைவர்களே, பேரன்பிற்கும் மதிப்புக்குமுரிய பிரதம விருந்தினர் அவர்களே, அவர் தம் துணைவர் அவர்களே, மதிப்புக்குரிய வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்களே, பாடசாலை அபிவிருத்திச் சங்க மற்றும் பாடசாலை அபிவிருத்திக் குழு அங்கத்தவர்களே, பழைய மாணவர் சங்க உறுப்பினர்களே, வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்களே, அயற் பாடசாலை அதிபர்களே, எமது பாடசாலை உப அதிபர் அவர்களே, எமது பாடசாலையின் வெற்றியின் அச்சாணிகளான எமது பாடசாலை ஆசிரியர்களே, அன்பான பெற்றோர்களே, ஓய்வுநிலை கல்விசார் அதிகாரிகளே, நலன்விரும்பிகளே, வருகை தந்திருக்கும் நிறுவனத் தலைவர்களே, பெரியோர்களே உங்கள் அனைவருக்கும் என் உள்ளம் நிறைந்த வணக்கத்தைக் கூறி அனைவரையும் வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

வடமராட்சிப் பிரதேசத்தில் பெண்களுக்கென தனிச் சிறப்புடன் இயங்கும் இப்பாடசாலையானது 1823 ஆம் மெதடிஸ்த மிஷனரிகளால் ஆரம்பிக்கப்பட்டது. மிக நீண்ட வரலாற்றுப் பெருமைகளை தன்னகத்தே கொண்ட எமது பாடசாலையின் 2013 ஆம் ஆண்டுக்கான வருடாந்தப் பரிசளிப்பு விழாவின் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் எமது பாடசாலை பழைய மாணவியும் கொழும்பு பழைய மாணவர் சங்கத் தலைவியுமான திருமதி. தியாகமலர் இரட்ணம் அவர்கள் எமது பாடசாலையின் மீது கொண்டுள்ள பற்று விபரிக்க முடியாதது. 1963 ஆம் ஆண்டு முதல் 1968 ஆம் ஆண்டு வரை எமது பாடசாலையில் கற்று 1996 ஆம் ஆண்டு முதல் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் செயலூக்கமுள்ள அங்கத்தவராகவும், பல தடவைகள் நிர்வாகக் குழு உறுப்பினராகவும், தலைவராகவும் இருந்து பாடசாலையின் நலனுக்காக அயராது உழைத்து வருகின்றார். பிரதம விருந்தினரின் துணைவர் எந்திரி.க.இரட்ணம் அவர்கள் கல்வி அமைச்சில் கல்விப் பொறியியலாளர் ஆலோசகராகவும், செயற்றிட்டப் பொறியியலாளராகவும் செயலாற்றியவர். தொடர்ந்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் செயற்றிட்டப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளார். அவர் தமது பணிக் காலத்தில் எமது பாடசாலைக்குப் பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்துள்ளார். எமது பாடசாலையின் வளர்ச்சிக்காகவும் மாணவர்களுக்கு பல உதவிகள் புரிந்தும் இத்தம்பதியினர் திரை மறைவிலிருந்து செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இப்பரிசளிப்பு விழா சிறப்பாக நடைபெறுவதற்கு எமது பாடசாலை பழைய மாணவர்சங்கங்களான தாய்ச் சங்கம், கொழும்புக் கிளை மற்றும் வெளிநாடுகளிலுள்ள அவுஸ்திரேலியா பழைய மாணவர் சங்கம், கனடா பழைய மாணவர் சங்கம் மற்றும் இலண்டன் பழைய மாணவர் சங்கம் மற்றும் ஏனைய நினைவுப் பரிசில்கள் வழங்கியோர் தமது நிதி உதவியினைச் செய்துள்ளனர். ஞாபகார்த்தப் பரிசில்கள் அவற்றை வழங்கியோர் வழங்கிய ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் எமது பாடசாலை முகாமைத்துவக் குழுவினரால் பரிசீலிக்கப்பட்டு அதனடிப்படையிலே வழங்கப்படுகின்றன என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

எதிர் கால இலங்கையை அறிவுக் கேந்திரமாக விருத்தி செய்யும் தேசிய வேலைத்திட்டத்தில், மகிந்த சிந்தனை முன்னோக்குப் பார்வையின் அடிப்படையில் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைவதில் பாடசாலைகள் முக்கிய பங்காற்றுகின்றன. அறிவுசார் பொருளாதாரத்துக்கான மானிட மூலதனத்தை உருவாக்கும் பிரதான இடமாக உள்ள பாடசாலையில் ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்விக்காக அனைத்துப் பிள்ளைகளுக்கும் சமவாய்ப்புடன் கூடிய சந்தர்ப்பங்களை உருவாக்குதல், தரமான கல்வியை வழங்குவதை உறுதிப்படுத்துதல், பாடசாலை சமூகத்தைப் பாடசாலையுடன் பிணைக்கும் பாடசாலை மேம்பாட்டுத்திட்டம் மற்றும் நிர்வாக முகாமைத்துவக் கட்டமைப்பை உருவாக்குதல் என்பன சம காலத்தில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களின் தொனிப்பொருளாகக் கருதப்படுகிறது.

இவ்வகையில் எமது பாடசாலை ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகளை விருத்தி செய்யும் செயற்றிட்டத்தில் இணைக்கப்பட்டமை எமக்குக் கிடைத்த பேறாகும். இவ்வேலைத் திட்டத்தின் கீழ் மகிந்தோதய வகை II ஆய்வு கூடம் எமக்கு கட்டித் தரப்பட்டு திறப்பு விழாவுக்குத் தயார்நிலையில் உள்ளது. மேலும் எமது பாடசாலைக்கான ஊட்டற் பாடசாலைகளாக யா/காசிநாதர் வித்தியாசாலை, யா/துன்னாலை வடக்கு மெ.மி.த.க.பாடசாலை, யா/மாதனை மெ.மி.த.க.பாடசாலை, யா/மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலை என்பன தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலையில் கல்வியைப் பெறுகின்றவர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்யும் வகையில் பாடசாலை தனது தேவைகளை இனங்கண்டு பாடசாலை மட்டத் திட்டமிடலினூடாக விளைதிறன் மிக்க பாடசாலையாக இயங்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. உயர் தரத்திலான தரமான கல்விக்குத் தேவையான கற்பித்தற் திறன்களை ஆசிரியர்களிடத்தே விருத்தி செய்வதற்காக பாடசாலை மட்ட ஆசிரியர் விருத்திச் செயற்பாடுகள் திட்டமிடப்பட்டு பாடசாலை மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. மாணவரின் கற்றல் மேம்பாட்டை நோக்காகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் இச்செயற்பாடானது மாறிவரும் தொழினுட்ப உலகின் சவால்களுக்கேற்ப ஆசிரியர்கள் தம்மை இற்றைப்படுத்திக் கொள்ள உதவுகிறது.

மேலும் 2013 ஆம் ஆண்டு முதல் உயர்தரத்தில் விஞ்ஞான, கணித, வர்த்தகத் துறைகளுடன் கலைப் பிரிவில் ஒரு பிரிவை மாத்திரம் கொண்டதாகவும் உயிரியல் தொழினுட்பத்தினையும் பொறியியற் தொழினுட்பத்தையும் கொண்டதாகவும் 1AB Super பாடசாலையாக எமது பாடசாலை தெரிவுசெய்யப்பட்டுள்ளது. உயிரியல் தொழினுட்பப் பிரிவுக்காக எமது பாடசாலைக்கு விவசாயப் பட்டதாரி ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். ஏனைய உயர்தரத் தொழினுட்பத்துக்கான பாடங்களை எமது ஆசிரியர்களே அதற்கான பயிற்சியைப் பெற்று சிறப்பாகக் கற்பித்து வருகின்றனர். தொழினுட்ப பிரிவுக்கான மகிந்தோதய தொழினுட்ப பீடத்துக்கான கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இக்கட்டிடத்துக்கான அடிக்கல் கௌரவ பாரம்பர்ய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் அபிவிருத்தி அமைச்சர் கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களால் 24.06.2014 இல் நாட்டி வைக்கப்பட்டது.

2013 ஆம் 2014 ஆம் ஆண்டுகளில் மகிந்தோதய தொழினுட்ப ஆய்வுகூடத்துக்காக ரூபா 20 மில்லியனும் மகிந்தோதய தொழினுட்ப பீடத்துக்காக ரூபா.80 மில்லியனும் எமது பாடசாலையில் முதலீடு செய்யப்படுகிறது. இப்பாரிய முதலீட்டினூடாக பாடசாலையிலிருந்து எதிர்பார்க்கப்படும்

விளைவுகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். இவ்வளங்களை வினைத்திறனுடன் வடமராட்சிப் பிரதேச மாணவருக்காக உச்சளவில் பயன்படுத்த வேண்டியது பாடசாலையின் தலையாய கடமையாகும்

இவ்வகையில் எமது பாடசாலைக்கு உள்வாங்கப்படும் அனைத்து மாணவர்களும் அவர்களுக்குள் பொதிந்திருக்கும் உள்ளார்ந்த திறன்களை விருத்தி செய்து, தமக்கேற்ற துறைகளைத் தெரிவு செய்து, பூரண ஆளுமையுள்ளவர்களாக, தொழிலுலகிற்குப் பொருத்தமானவர்களாக, நவீன தொழினுட்ப உலகின் சவால்களை எதிர்கொள்ளக்கூடியவர்களாக உருவாவதை உறுதிப்படுத்துவது எமது முக்கிய கடமையாக உள்ளது.

மாணவரிடத்தே உயர்மட்டச் சிந்தனைத் திறன்களை (High order thinking skills) விருத்தி செய்யும் பொருட்டு உயர்மட்ட இடங்களான(High order spaces) நூலகம், விஞ்ஞான ஆய்வுகூடம், கணனி ஆய்வுகூடம், பல்லூடக அறை மற்றும் நெனச தொலைக் காட்சியறை என்பன மாணவரின் கற்றலுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

மேலும் எமது மாணவர்களின் நலன் கருதி எமது பாடசாலை பழைய மாணவனும் ஜேர்மன் நாட்டின் ஹம்பேர்க் மாநில செனட் உறுப்பினருமான திரு.அயன் கிருகரன் அவர்கள் சிற்றுண்டிச்சாலை மற்றும் மாநாட்டு மண்டபத்தைக் கொண்ட இருமாடிக் கட்டிடம் ஒன்றை ஏறத்தாழ 8.5 மில்லியன் செலவில் அமைத்து தருகின்றார். இதற்கான கட்டிட வேலைகள் பூர்த்தியடையும்நிலையில் உள்ளது. எதிர்வரும் கார்த்திகை மாதம் மூன்றாம் வாரத்தில் மேற்படி கட்டிடம் திரு.அயன் கிருகரனினால் பாடசாலையிடம் ஒப்படைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பொதுப் பரீட்சைகளின் பெறுபேறுகளை நோக்கின் எமது பாடசாலை 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரணம் மற்றும் உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றுள்ளது. க.பொ.த(சா.த) இல் தமிழ் மொழி மூலம் 94% சித்தியினையும் ஆங்கில மொழி மூலம் 100% சதவீத சித்தியினையும் பெற்று தனது சாதனையை தொடர்ந்தும் நிலை நிறுத்தியுள்ளது. க.பொ.த(உ.த)ப் பரீட்சையில் விஞ்ஞானப் பிரிவில் 75% உம் கணிதப் பிரிவில் 75% உம் வர்த்தகப் பிரிவில் 88% உம் கலைப் பிரிவில் 76% உம் சித்தி வீதமாக உள்ளது. இவ்வருடம் வடமராட்சி கல்வி வலயத்தில் நடத்தப்பட்ட புரட்டாதி மாத பௌர்ணமி விழாவின் போது க.பொ.த(சா.த) இல் தமிழ்ப் பாடத்துக்கான விருதும் க.பொ.த(உ.த) இல் விஞ்ஞான மற்றும் வர்த்தகத் துறைகளுக்கான விருதையும் எமது பாடசாலை பெற்றுக் கொண்டமையை இங்கு பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

கல்வியில் மட்டுமல்லாது இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் எமது பாடசாலை மாணவர்கள் விளையாட்டு, ஆங்கில தினம், இரண்டாம் மொழி சிங்களமொழித்தினம், தமிழ்த் தினப் போட்டிகளில் மாகாண, தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிகளையும் பெற்றுள்ளனர். 2013 ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் 11 அணிகளும், ஆங்கில தினப் போட்டியிலும் மாணவிகள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்க விடயமாகும். தேசிய மட்டக்கபடிப் போட்டியில் இரண்டாம் இடத்தினையும் , ஆங்கில தினப்போட்டியில் சொல்வதெழுதலில் முதலாம் இடத்தினையும் பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். மேற்படி

விளையாட்டுக்களில் விளையாட்டுக்குப் பொறுப்பான ஆசிரியர் மட்டு மல்லாது ஏனைய பாட ஆசிரியர்களின் ஈடுபாடும் போற்றத்தக்க விடயமாகும்.

எமது பாடசாலையின் கல்வி மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாட்டில் ஏற்படும் சாதனைகளுக்கு காரணகர்த்தாக்களாக அர்ப்பணிப்புடன் அயராது உழைக்கும் எமது பாடசாலை ஆசிரியர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.ஒவ்வொரு ஆசிரியர்களும் தமக்கு வழங்கப்படும் கடமைகளையும் மேலதிக பொறுப்புக்களையும் முழுமனதுடன் சிறப்பாகச் செய்வது எமது பாடசாலை தனது இலக்குகளை எய்துவதற்கு உறுதுணையாக உள்ளது.

கடந்த 17 வருடங்களாக பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற திருமதி. செல்வமலர் சுந்தரேசன் பாடசாலைக்காக ஆற்றிய சேவை இங்கு பாராட்டத் தக்க விடயமாகும். பாடசாலை அதி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருந்த இக்கட்டான யுத்த காலப்பகுதிகளிலும் பாடசாலையின் தரத்தினை குறைய விடாது மேலும் உயர்த்தி பல சாதனைகளை நிலைநாட்டியுள்ளார். பாடசாலைக்கான பல பௌதிக வளங்களை ஏற்படுத்தியது மாத்திரமல்லாது கல்வியிலும் குறிப்பாக ஆங்கில மொழி மூலமான கல்வியிலும் இணைப்பாடவிதான செயற்பாட்டிலும் சாதனைகளை நிலைநாட்டி பாடசாலைக்காக அரும் பணியாற்றியுள்ளார். இதற்காக பாடசாலைச் சமூகம் அவருக்கு நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

எமது பாடசாலையில் மனித வளத்தைப் பொறுத்தவரையில் நூலக ஆசிரியர், விஞ்ஞான ஆய்வுகூட உதவியாளர், மற்றும் பாடசாலைச் சுத்திகரிப்புத் தொழிலாளி ஆகிய ஆளணியினர் தேவையாக உள்ளது. ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் மற்றும் தெரிவுப் பாடங்கள் ஒரே நேரத்தில் நிகழ்த்துவதற்கு போதிய வகுப்பறை இடவசதி இல்லாதிருப்பது குறிப்பிடக்கதக்கது. மேலும் உள்ளக விளையாட்டுக்கான மண்டபம், அழகியற் பாடங்களுக்கான கூடம், மனையியல் ஆய்வுகூடம் என்பன பாடசாலையின் பௌதிக வளத் தேவைகளாக உள்ளன. மேலும் மாணவர்களுக்கான பகலுணவைத் தயார் செய்வதற்குப் பொருத்தமான சமையறை அவசரத் தேவையாக உணரப்படுகிறது.

எமது பாடசாலை சிறப்பாகத் தனது பணிகளைத் திட்டமிட்டுச் செயலாற்ற பல வழிகளிலும் ஆலோசனைகளையும் வழிகாட்டலையும் வழங்கும் வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்களுக்கும் வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்களுக்கும் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அதிகாரிகளுக்கும் மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கும் நிரல் கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கும் பாடசாலைச் சமூகம் சார்பாக எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது பாடசாலையின் தேவைகளான ஆங்கில பாட ஆசிரியருக்கான சம்பளம், அலுவலக உதவியாளர் சம்பளம் மற்றும் பகல் நேரக் காவலாளியின் சம்பளம் என்பவற்றை மாதாந்தம் வழங்கும் பழைய மாணவர் சங்கத் தாய்ச் சபையினருக்கு பாடசாலைச் சமூகம் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நிலையான வைப்புக்களை ஏற்படுத்தி அதன் வட்டிப் பணம் மூலம் பாடசாலைக்கான தேவைகளை பூர்த்தி செய்யும் ஏனைய பழைய மாணவர்

சங்கங்களுக்கும், குறிப்பாக நூலக அபிவிருத்திக்காக உதவும் இலண்டன் பழைய மாணவர் சங்கத்தினருக்கும், பரிசளிப்பு விழாவுக்காகவும் , மாணவருக்கான மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டப் போட்டிகளுக்கான செலவுகளுக்காகவும் வறிய மாணவர்களுக்காக உதவும் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். பாடசாலையின் தேவைகளை தெரியப்படுத்தும் போதெல்லாம் மனமுவந்து உதவும் பழைய மாணவர் சங்கத்தினருக்கு குறிப்பாக சிற்றுண்டிச்சாலை கட்டிட மேற்பார்வையாளருக்கான கொடுப்பனவுக்காக கனடா பழைய மாணவர் சங்கமும் தேசியமட்ட இணைப்பாடவிதான செயற்பாடுகள் தொடர்பான போட்டிகளில் இவ்வருடம் கலந்து கொண்ட மாணவருக்கான மேலதிக செலவீனத்துக்காக இலண்டன் மற்றும் அவுஸ்திரேலியாபழைய மாணவர் சங்கங்கள் உதவியுள்ளன. இவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது பாடசாலையின் கட்டிடட வேலைகள் தொடர்பான ஆலோசனைகளை நாம் கேட்டபோதெல்லாம் மனமுவந்து வழங்கும் எமது பாடசாலை பழைய மாணவி எந்திரி T.சாந்தாதேவி அவர்களுக்கும் பாடசாலை சமூகம் சார்பாக எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாடசாலையின் செயற்பாடுகளில் தோளோடு தோள் கொடுத்துதவும் பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் தமது வேலைப் பளுவின் மத்தியிலும் பாடசாலை விவகாரங் களில் கரிசனையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டு வருகின்றனர். பாடசாலை மட்டத்திட்டமிடல், பாட மற்றும் இணைப்பாடவிதானத் திட்டமிடல், கட்டிட பராமரிப்பு மற்றும் சிறுதிருத்தங்கள், பாடசாலை வாகனப் பராமரிப்பு, மாணவர் மதிய உணவு வழங்கல் போன்ற சகல செயற்பாடுகளிலும் செயலூக்கத்துடன் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலை முகாமைத்துவக் குழுவினர் பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்படும் சகலவேலைத்திட்ங்களிலும் பூரண ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

வருடந்தோறும் பாடசாலையில் நடாத்தப்படும் இவ்விழாவில் சிறந்த அடைவினைப் பெறும் மாணவிகள் பரிசில்களைப் பெற்று கௌரவிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு மேலும் கற்றலின்பால் ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கு ஒரு ஊக்கலாக இது அமைகின்றது. இவ்வருடம் பரிசில்களைப் பெறும் சகல மாணவிகளுக்கும் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். பரிசில்களைப் பெறாத மாணவிகளும் அடுத்துவரும் பரிசளிப்பு விழாவில் பரிசுகளைப் பெற்றுக் கொள்ள முடியும். இந்நிகழ்வானது உங்களுக்கு ஒரு எதிர்பார்ப்பைத் தருகின்றது. நீங்கள் மேலும் முயற்சி செய்து அடுத்த ஆண்டுக்கான பரிசுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

பாடசாலையில் கற்றலுக்கான கவிநிலையை உருவாக்கி பாடசாலையின் உள்ளகச் செயற்பாட்டுக்கு மட்டுமல்லாமல் கற்றல் கற்பித்தல் இணைப்பாடவிதானங்களில் மாணவர்கள் உயர்மட்ட சாதனைகள் புரிவதற்கு உறுதுணையாக விளங்கும் பெற்றோர், பழைய மாணவர் சங்கத்தினர் , பிரதி அதிபர், பகுதித்தலைவர்கள், சிரேஷ்ட ஆசிரியர்கள், தேசிய கல்வியியல் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர்கள், மாணவத் தலைவர்கள் கல்விசாரா ஊழியர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாடசாலையில் தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் பல்வேறு மேம்பாட்டுக்குழுக்கள், முகாமைத்துவக் குழுக்களினதும், சமூகத்தினதும் ஒத்துழைப்பு பாடசாலையின் வினைதிறனை தொடர்ச்சியாக உயர்வடைய வைக்கும் என்பதில் முழு நம்பிக்கை கொண்டுள்ளேன்.

எமது அழைப்பை முழுமனதுடன் ஏற்று இக்கல்லூரியின் பரிசளிப்புத்தினமாகிய இன்று வருகை தந்து எம்மைச் சிறப்பித்து , இனிய உரையாற்றி எமது மாணவச் செல்வங்களுக்குப் பரிசில் வழங்கி கௌரவித்த பிரதம விருந்தினர் கொழும்பு பழைய மாணவ சங்கத் தலைவி திருமதி.தியாகமலர் இரட்ணம் அவர்களுக்கும் அவர்தம் துணைவர் எந்திரி.க.இரட்ணம் அவர்களுக்கும் பாடசாலைச் சமூகத்தின் சார்பிலும் என் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆரோக்கியமான அறிவுசார் சமூகத்தை உருவாக்குவதற்கு தொடர் வழிகாட்டலையும் உதவிகளையும் நல்கி வரும் கல்வி அமைச்சின் செயலாளர் உட்பட மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக்கல்விப் பணிப்பாளர் ஏனைய கல்வித் திணைக்கள அதிகாரிகள், ஆசிரிய ஆலோசகர்கள் அனைவருக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்து ஆசியுரை வழங்கிய மதத்தலைவர்களுக்கும் நன்றிகள் உரித்தாகட்டும்.

எமது அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்திருக்கும் அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர், உறுப்பினர்கள், பழைய மாணவ சங்கத்தினர், நலன்விரும்பிகள், பெற்றோர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள். தமது சமூகத்தின் வளர்ச்சியிலும் சிறார்களின் வளர்ச்சியிலும் அதிக அக்கறை கொண்ட பெற்றோர் , நலன்விரும்பிகள் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்து வருகின்றனர். இவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாடசாலையின் சகல செயற்பாடுகளிலும் தமது பங்களிப்பினை நல்கி வரும் அனைத்து உள்ளங்களுக்கும் நன்றி கூறி எனது அறிக்கையை நிறைவு செய்கின்றேன்.

*****

# பாடசாலையின் முகாமைத்துவம்

**மாணவர் தொகை**

| | |
|---|---|
| தரம் 6 - 11 | 766 |
| தரம் 12 - 13 | 359 |
| **மொத்த மாணவர்** | **1125** |

**ஆசிரியர் தொகை**

| | | |
|---|---|---|
| பட்டதாரி ஆசிரியர்கள் | - | 30 |
| பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் | - | 20 |
| பயிற்றப்படாத ஆசிரியர்கள் | - | 01 |
| தொண்டர் ஆசிரியர்கள் | - | 02 |
| கல்வி சாரா ஆளணி | - | 05 |

**ஆளணித்தேவை**

| | | |
|---|---|---|
| கல்வி சாரா ஆளணி | - | 02 |
| நூலக ஆசிரியர் தேவை | - | 01 |

## 2013ல் இளைப்பாறியவர்கள் விபரம்

திருமதி S.சிவனேசன் (ஆசிரியர்) — திருமதி I.ஸ்ரீரங்கன் (பிரதி அதிபர்)

## 2013ல் இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர் விபரம்

திருமதி.வா.அரவிந்தன் — திரு.பி.டேவிட்ராஜ்
திருமதி.த.முரளிதரன் — திருமதி.ம.அருள்நேசன்
திருமதி.ப.முகுந்தன் — திரு.T.பார்த்தீபன்
திருமதி.சு.கண்ணதாசன் — திருமதி.அ.செல்வகுமார்

**2013ல் எமது பாடசாலையில் விஞ்ஞான ஆசிரியராக கடமையாற்றி இறைபதம் அடைந்தவர் செல்வி.J.சின்னராசா**

## மாணவர் மன்றங்களும் பொறுப்பாசிரியர்களும்

| | மன்றம் / கழகம் | பொறுப்பாசிரியர்கள் |
|---|---|---|
| 1. | இந்துமாமன்றம் (பொது) | திருமதி.R.சிறீராகவன் |
| 2. | கிறிஸ்தவமன்றம் (பொது) | திருமதி.A.V.U.உதயகுமார் |
| 3. | ஆங்கிலமன்றம் (பொது) | திருமதி. V.சித்திரவடிவேல் |
| 4. | தமிழ் மன்றம் (பொது) | திரு.பரா ரதீஸ் |
| 5. | உயர்தர மாணவர் மன்றம் | திருமதி.S.சிவலிங்கம் |
| 6. | விளையாட்டுமன்றம் | திருமதி.R.சிவதாசன் |
| 7. | கணித விஞ்ஞான மன்றம் | திரு.K.முகுந்தன் |
| 8. | சமூகவிஞ்ஞானமன்றம் | செல்வி. Y.இராதாகிருஷ்ணன் |
| 9. | அனர்த்த முகாமைத்துவக்கழகம் | செல்வி. Y.இராதாகிருஷணன் |
| 10. | சுற்றாடல் கழகம் | திருமதி. T.சற்குணராசா |
| 11. | தகவல் தொழினுட்பக்கழகம் | செல்வி.K.பொன்னுத்துரை |
| 12. | வணிகமன்றம் | திருமதி.K.சிவகுமார் |
| 13. | மாணவர் சுகாதாரக்கழகம் | திருமதி.அ.பாலேந்திரன் |
| 14. | அழகியல் மன்றம் | செல்வி.K.தெய்வநாயகம் |
| 15. | சாரணியம் | செல்வி.K.தெய்வநாயகம் |

# பாடரீதியான பரிசுக்குரியவர்கள் (2013)

## தரம் - 6

| | |
|---|---|
| 1. சுஜானி இராஜேஸ்வரன் | சைவநெறி, தமிழ், சங்கீதம், சுகாதாரமும் உடற்கல்வியும் |
| 2. சுவாங்கி தோமஸ்யூட் | றோமன் கத்தோலிக்கம் |
| 3. றெசீமா மதனமோகன் | கிறிஸ்தவம் |
| 4. அபிநயா மனோராஜ் | ஆங்கிலம், கணிதம் |
| 5. சௌமியா அதியமான் | விஞ்ஞானம் |
| 6. விதுர்சனா நித்தியராஜ் | வரலாறு |
| 7. மாதுமை ராஜகுரு | புவியியல் |
| 8. சிவானிகா சிவகடாட்சம் | வாழ்க்கைத்தேர்ச்சியும் குடியுரிமைக்கல்வியும் |
| 9. காருண்யா சுகுமாரன் | நடனம் |
| 10. வேணுஜா ஶ்ரீநடராஜா | செயன்முறைத்தொழினுட்பம் |
| 11. விதுர்சனா நித்தியராஜ் | சித்திரம் |

## தரம் - 7

| | |
|---|---|
| 1. நிருஷா பூபாலசிங்கம் | சைவநெறி, தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், சுகாதாரமும் உடற்கல்வியும், நடனம் , செயன்முறைத் தொழினுட்பம் |
| 2. பிரியதர்ஷா அல்டன் | றோமன் கத்தோலிக்கம் |
| 3. தனராணி சற்குணராசா | கிறிஸ்தவம் |
| 4. சாகித்தியா இந்திரலிங்கம் | ஆங்கிலம் |
| 5. திலக்ஷியா மகேந்திரன் | வாழ்க்கைத்தேர்ச்சியும் குடியுரிமைக்கல்வியும் |
| 6. விதுனா முருகதாஸ் | சங்கீதம் |
| 7. ஜனார்த்தனி பராபரன் | சித்திரம் |

## தரம் - 8

| | |
|---|---|
| 1. சர்மினி நேசநாதன் | சைவநெறி, வரலாறு, சுகாதாரமும் உடற்கல்வியும், செயன்முறைத்தொழினுட்பம் |
| 2. மேரிஜான்சிகா ஜஸ்ரீன் குரூஸ் | றோமன் கத்தோலிக்கம் |
| 3. | கிறிஸ்தவம் |
| 4. சிவந்தினி சிவகுமார் | ஆங்கிலம் |
| 5. பவித்திரா கேதீஸ்வரன் | தமிழ் |
| 6. கேஷிகா கிருஷ்ணா | கணிதம் |
| 7. வித்தகி புவனேந்திரம் | விஞ்ஞானம் |
| 8. கேசிகா கிருஷ்ணா | புவியியல் |
| 9. லிசானினி ஜெயச்சந்திரன் | வாழ்க்கைத்தேர்ச்சியும் குடியுரிமைக்கல்வியும் |
| 10. கோபிகா கதிரமலை<br>11. அஷ்மிதா திரவியராசா | நடனம் |
| 12. யதுர்சனா ஜெயராசா | சங்கீதம் |
| 13. தர்சிகா யோகேஸ்வரன்<br>14. நிர்மலா.T | சித்திரம் |

## தரம் - 9

| | |
|---|---|
| 1. யோகரட்ணம் சந்தியா | சைவநெறி, சங்கீதம் |
| 2. பிரகலாதன் ஆசிகா | தமிழ், கணிதம், செயன்முறைத்தொழினுட்பம் |
| 3. கோசலா சிவபாலன் | புவியியல், சுகாதாரமும் உடற்கல்வியும், விஞ்ஞானம் |
| 4. நர்மிகா ரவிக்குமார் | ஆங்கிலம் |
| 5. மதுசா குருகுலசிங்கம் | வரலாறு |
| 6. வித்தியா முருகதாஸ் | வாழ்க்கைத்தேர்ச்சியும் குடியுரிமைக்கல்வியும் |
| 7. தர்சிகா தேவபாலன் | சித்திரம் |
| 8. புகழினி புஷ்பராசா | நடனம் |
| 9. றொபிசா அரசரட்ணம் | றோமன் கத்தோலிக்கம் |
| 10. அருண்யா அன்ரனிபெனடிற் | கிறிஸ்தவம் |
| 11. சகிந்தனா ஸ்ரீஸ்கந்தராசா | செயன்முறைத்தொழினுட்பம் |
| 12. மதுசா மலர்க்கண்ணன் | செயன்முறைத்தொழினுட்பம் |
| 13. சிவகலை கணேசமூர்த்தி | செயன்முறைத்தொழினுட்பம் |

## தரம் - 10

| | |
|---|---|
| 1. சிந்துஷா சிவபாலன் | சைவநெறி, தமிழ் இலக்கியநயம் |
| 2. டிலக்சனா அன்ரன் ஜெயகுமார் | றோமன் கத்தோலிக்கம், சுகாதாரமும் உடற்கல்வியும் |
| 3. நிதுஷா ஜெயகுமார் | கிறிஸ்தவம் |
| 4. நிஷோபா ஜெகநாதன் | தமிழ், குடியுரிமைக்கல்வி |
| 5. டிலக்சனா சண்முகவசீகரன் | ஆங்கிலம் |
| 6. சங்கீதா ஆனந்தமூர்த்தி | கணிதம் |
| 7. மாதுமை குமுக்கேசன் | விஞ்ஞானம் |
| 8. தமிழரசி இராமகிருஷ்ணன் | வரலாறு, சங்கீதம் |
| 9. துளசிகா புவனேந்திரன் | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், ஆங்கிலஇலக்கியம் |
| 10. யசோதா புவிதரன் | நடனம் |
| 11. துஷ்யந்தி மகேஸ்வரன் | சித்திரம் |
| 12. துஷ்யந்தி குகநாதன் | புவியியல் |
| 13. கிருத்திகா தயாநிதி | வணிகமும் கணக்கியலும் |

## தரம் - 11

| | |
|---|---|
| 1. நிவேதா உதயராஜன்<br>சோபிகா செல்வகுமார்<br>ஆர்த்திகா குருசாமி | சைவநெறி |
| 2. லக்சிகா மைக்கல் ராஜ்குமார் | றோமன் கத்தோலிக்கம் |
| 3. ஜீவிதா ஸ்ரீரங்கநாதன் | கிறிஸ்தவம் |
| 4. சோவிகா செல்வகுமார் | தமிழ், விஞ்ஞானம், வரலாறு, தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், தமிழ் இலக்கிய நயம் |
| 5. யஸ்ரிக்கா ரகுநாதன் | ஆங்கிலம், கணிதம், வர்த்தகம் |
| 6. கன்யா ரவீந்திரன் | சுகாதாரமும் உடற்கல்வியும் |
| 7. ஆரணி பாஸ்கரன்<br>8. புவிதா சூரியமூர்த்தி | ஆங்கில இலக்கியம் |
| 9. ரம்யா நாகேஸ்வரன் | நடனம் |
| 10. கௌதமி காண்டீபன்<br>ஜெயந்தா ஜெகதீஸ்வரசர்மா | சங்கீதம் |
| 11. விவேகா முருகதாஸ் | சித்திரம் |
| 12. மாதுளா கிருஷ்ணசிங்கம் | புவியியல் |

## தரம் - 12 கலைப்பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | வாசுகி சிவசக்திவேல் | தமிழ் |
| 2. | கோகிலவதனா இராதாகிருஷ்ணன் | அளவையியலும் விஞ்ஞானமுறையும் |
| 3. | சுகன்யா நவநீதன் | இந்துநாகரிகம், புவியியல் |
| 4. | துஷாந்தி சுதாகர் | அரசியல் விஞ்ஞானம் |
| 5. | சிந்துஷா சிவசிதம்பரம் | சங்கீதம் |
| 6. | பூங்கோதை யூலியஸ் றூபேந்திரன் | கிறிஸ்தவநாகரிகம் |

## தரம் 12 தொழினுட்பப்பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | மெடோலினா குணசேகரம் | தொழினுட்பத்துக்கான விஞ்ஞானம், பொறியியல் தொழினுட்பம் |
| 2. | தர்சிகா முத்துலிங்கம் | தகவல்தொடர்பாடல் தொழினுட்பம், உயிர்த்தொகுதி தொழினுட்பம் |
| 3. | சோபியா வின்சன்டீபோல் | புவியியல் |
| 4. | சோபனா வின்சன்டீபோல் | கணக்கியல் |

## தரம் 12 வர்த்தகப்பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | சிந்துராணி செல்வராசா | பொருளியல் , வர்த்தகம் |
| 2. | நிரோஷா கமலநாதன் | கணக்கியல் |

## தரம் 12 விஞ்ஞானப்பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | மயூரி கோபிநாத் | உயிரியல், இரசாயனவியல் |
| 2. | பிரதிகா துரைசிங்கம் | பௌதிகவியல் |
| 3. | கோபிகா வேணுகோபாலவாணிதாசன் | இணைந்தகணிதம் |

## தரம் 13 கலைப்பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | காருண்யா நவனேசன் | தமிழ், அளவையியலும் விஞ்ஞானமுறையும் |
| 2. | அம்பிகை சிவானந்தா | இந்துநாகரிகம் |
| 3. | ஜனனி திருமால் | புவியியல் |
| 4. | கீர்த்தனா முருகதாஸ் | சங்கீதம் |
| 5. | வைஷ்ணவி பகீரதசர்மா | நடனம் |
| 6. | மேரிகொன்ஸ்ரெபா கமலதாஸ் | கிறிஸ்தவநாகரிகம் |

## தரம் 13 வர்த்தகப்பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | ஜெயவதனா அழகராசா | பொருளியல், கணக்கியல் |
| 2. | ஜஸ்வர்யா சபாரத்தினசர்மா | வணிகக்கல்வி |

## தரம் 13 விஞ்ஞானப்பிரிவு

| | | |
|---|---|---|
| 1. | அபிநயா சண்முகேஸ்வரன் | உயிரியல் |
| 2. | சாயிதா செல்வலிங்கம் | பௌதிகவியல் |
| 3. | தக்ஷா தேவராஜா | இரசாயனவியல் |
| 4. | யசிதா சற்குணநாதன் | இணைந்தகணிதம் |

## வகுப்பு முதல்நிலை மாணவர்களுக்கான பரிசில்கள்

| | |
|---|---|
| தரம் 6 | சுயானி இராஜேஸ்வரன் |
| தரம் 7 | நிருஷா பூபாலசிங்கம் |
| தரம் 8 | சர்மினி நேசநாதன் |
| தரம் 9 | ஆசிகா பிரகலாதன் |
| தரம் 10 | சிவபாலன் சிந்துஜா |
| தரம் 11 | செல்வகுமார் சோவிகா |
| தரம் 12 கலை | பூங்கோதை யூலியஸ் றூபேந்திரன் |
| தரம் 12 தொழினுட்பம் | தர்சிகா முத்துலிங்கம் |
| தரம் 12 கணிதப்பிரிவு | கோபிகா வேணுகோபாலவாணிதாசன் |
| தரம் 12 உயிரியல்பிரிவு | மயூரி கோபிநாத் |
| தரம் 12 வர்த்தகம் | சிந்துராணி செல்வராசா |
| தரம் 13 கலை | காருண்ஜா நவநேசன் |
| தரம் 13 வர்த்தகம் | ஜெயவதனா அழகராசா |
| தரம் 13 கணிதப்பிரிவு | யசிதா சற்குணராசா |
| தரம் 13 உயிரியல் | அபிநயா சண்முகேஸ்வரன் |

### பாடசாலை மட்டத்தில் நடாத்தப்பட்ட பொதுஅறிவுப்போட்டிக்கான பரிசில் பெறுவோர்

| | |
|---|---|
| தரம் 6 | K.மதுமிதா |
| தரம் 7 | R.மாதுமை, E.துளசிகா , R.சுஜானி , B.சங்கவி , E.மயூரி |
| தரம் 8 | P.நிருஷா |
| தரம் 9 | மு.பிரியங்கா |
| தரம் 10 | ம.மதுசா , P.டடிசானி , P.பவானிகா |
| தரம் 11 | K.குமுக்கேசன், S.டிலக்சனா, S.வைதேகி |
| தரம் 12 | செ.சோவிகா |
| தரம் 13 | பா.லக்சனா |

### பாடசாலை மட்டத்தில் தரம் 6றக்கு நடாத்தப்பட்ட கைவினைத்திறன் போட்டி முடிவு

**தரம் - 6**

அபிதா டீன்குமார் , சியாமினி சிவானந்தன் , நிதர்சனா சுதாகரன்

## G.C.E A/L Result (2013)

### Maths
1. Ramya Ratnarajah 3A
2. Suloshini Sivaraman 3A
3. Lakshana Kamaianthan 2 B C

### Commerce
1. Mathanki Murugeswaran 3 B
2. Raishaginy Alex Paul A B C
3. Saranja Manivannan B 2C

### Science
1. Sajeethira Thirukkumaran 3 A
2. Majuri Sivakumar 2 A C
3. Chandricca Ainkarathas A 2B
4. Anusika Selvathas A B C
5. Pavitha Vijayakumar 2B C

### Arts
1. Jesotha Loganathan 2A B
2. Subahari Sureswarasarma 2A B
3. Sinthuja Kirushnarasa A B C
4. Tharmila Sivarajan 2A B
5. Kiriyanthy Arunmoli 2A B

# G.C.E (O/L) Result (2013)

## 9A - English Medium

1. Sribavan Sujeeva
2. Rajendram Thiventhini
3. Uthayarajan Nivetha

## 9 A - Tamil Medium

1. Selvakumar Sovitha

## 8A - English Medium

| | | | |
|---|---|---|---|
| 1. Selvalinkam Majitha | 8A B | 3. Ragunathan Jastika | 8A B |
| 2. Loganathan Laavanja | 8A C | 4. Baskaran Arani | 8A S |

## 8A - Tamil Medium

| | | | |
|---|---|---|---|
| 1. Jeyasri Rajeevini | 8A B | 4. Sriskantharaja Vanaija | 8A C |
| 2. Murugadas Viveka | 8A B | 5. Arunthavvinajakamoorthy Thenisha | - 8A S |
| 3. Kurusamy Arthika | 8A B | | |

## 7A - English Medium

| | | | |
|---|---|---|---|
| 1. Raveenthiran Kanya | 7A 2B | 2. Pirapakaran Thusyanthini | 7A , B , S |

## 7 A - Tamil Medium

| | | | |
|---|---|---|---|
| 1. Sivalingam Jeyaluxmi | 7A 2B | 5. Varatharaja Mithuna | 7A B , C |
| 2. Vamathevan Shangeetha | 7A 2B | 6. Amirthalingam Tharanja | 7A ,B , C |
| 3. Varatharasa Abinaya | 7A B ,C | 7. Vaikuntharaja Vithiya | 7A B ,C |
| 4. Umapathy Kirushanthy | 7A 2C | 8. Nageswarasarma manoja | 7A B, S |

## 6A English Medium

| | | | |
|---|---|---|---|
| 1. Sithampalam Kasthuri | 6A ,2B, C | 2. Sooriyamoorthy Puviththa | 6A, 2B,S |

## 6A - Tamil Medium

| | | | |
|---|---|---|---|
| 1. Manivarnan Arathana | 6A, 2B,C | 6. Sivasothi Sinthuja | 6A, 2B,C |
| 2. Alvappillai Sangeetha | 6A, 2B,C | 7. Pulenthiran Thusyanthi | 6A, 2B,C |
| 3. Kathirkamanathan Keerthana | 6A,2B,C | 8. Kandeepan Gowthami | 6A,B, 2C |
| 4. Krishnasingam Mathula | 6A,2B,C | 9. Sriramachandran Srisankavi | 6A,B,C,S |
| 5. Rammiya Nageswaran | 6A , 3B | | |

## 5A - Tamil Medium

| | | |
|---|---|---|
| 1. | Maikal Rajkumar Luckshiha | 5A, 4B |
| 2. | Jayarasa Jathursha | 5A , 3B, C |
| 3. | Vijayaratnam Kopana | 5A , 3B, S |
| 4. | Panchadcharamoorthy Mathusha | 5A , 3B, S |
| 5. | Jegatheeswaran Jeyantha | 5A, 2B, 2C |
| 6. | Ananthan Pirunthika | 5A , 3B, S |

## 5A - English Medium

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | Vijayakumar Tharsika | 5A ,3B, C | 2. | Thayaparan Luxmy | 5A,3B, C |

# Details of University Entrants (Academic Year 2013/2014)

| | | |
|---|---|---|
| 1. | Rammiya Ratnarajah | - Engineering |
| 2. | Sulojini Sivaraman | - Engineering |
| 3. | Lakshana Kamalanathan | - Physical Science |
| 4. | Sajiththira Thirukkumaran | - Mdicine |
| 5. | Majuri Sivakumar | - Medicine |
| 6. | Chandricca Aingarathas | - Medicine |
| 7. | Varnika Kalaichelvan | - Bio Science |
| 8. | Viththiya Karunamoorthy | - Nursing |
| 9. | Anusiya Selvathas | - Food & Nutrition |
| 10. | Sobika Sivarasa | - Bio Science |
| 11. | Mayoorika Thuraisingam | - Agriculture |
| 12. | Krisajiny Vijayakumar | - Agriculture |
| 13. | Mahinthini Selvaratnam | - Agriculture |
| 14. | Pavitha Vijayakumar | - Nursing |
| 15. | Mathanki Murugeswaran | - Management |
| 16. | Radsajini Alexpaul | - Management |
| 17. | Tharmila Sivarajan | - Arts |
| 18. | Kriyanthi Arunmoli | - Arts |
| 19. | Sinthuja Krishnarajah | - Arts |
| 20. | Anetrexana Antonuthayakumar | - Arts |
| 21. | Yasotha Loganathan | - Arts |
| 22. | Piruntha Chandrakumar | - Arts |
| 23. | Tharsini Uthayakumar | - Arts |
| 24. | Hamsana Balasuventhiran | - Arts |

# Sports Competition 2013

| Games | Age group | Zonal | District | Provincial | National |
|---|---|---|---|---|---|
| Netball | Un 15 | 1st | 1st | 1st | Participated |
| | Un 17 | 2nd | -- | -- | -- |
| | Un 19 | 2nd | -- | -- | -- |
| Volley ball | Un 15 | 2nd | -- | -- | -- |
| | Un 17 | 1st | -- | -- | -- |
| | Un 19 | 1st | 1st | 1st | Participated |
| Kabady | Un 15 | 1st | 1st | 1st | 2nd |
| | Un 19 | 1st | 1st | 3rd | Participated |
| Badminton | Un 15 | 1st | | 1st | Participated |
| | Un 19 | 1st | | -- | |
| Table tennis | Un 15 | 1st | | 2nd | Participated |
| | Un 19 | 2nd | | -- | - |
| Chess | Un 15 | 1st | | 2nd | Participated |
| | Un 19 | 1st | | 1st | Participated |
| Cricket | Un 19 | 2nd | | | |
| Elle | Un 19 | 3rd | 2nd | 3rd | Participated |

## அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டிமுடிவுகள் - 2013

| | போட்டி | பிரிவு | பெயர் | இடம் |
|---|---|---|---|---|
| வலய மட்டம் | பேச்சு | 2<br>3<br>4 | விஸ்னுஜி கதிரமலை<br>வைஸ்ணவி சிவபாலன்<br>சிந்துஜா சிவசோதி | 3ம்<br>1ம்<br>2ம் |
| | பாவோதல் | 3 | தனுசாளினி ஈஸ்வரன் | 2ம் |
| | வாசிப்பு | 2 | மயூரி ஏகாந்தன் | 1ம் |
| | இலக்கியத் திறனாய்வு | 5 | சுபகரி சுரேஸ்வரசர்மா | 1ம் |
| | இலக்கணம் | 4 | செ.சோவிகா | 3ம் |
| | தமிழறிவு வினாவிடை | -- | -- | 3ம் |
| | தனி நடனம் | 2<br>3<br>4 | காருண்யா சுகுமாரன்<br>மதுமிதா மகிழ்ராஜன்<br>சரண்யா சற்குணராசா | 2ம்<br>1ம்<br>1ம் |
| | குழு நடனம் 1 | -- | -- | 2ம் |
| | நாட்டிய நாடகம் | -- | -- | 1ம் |
| மாவட்ட மட்டம் | வாசிப்பு | 2 | மயூரி ஏகாந்தன் | 2ம் |
| | பேச்சு | 3 | வைஸ்ணவி சிவபாலன் | 2ம் |
| மாகாண மட்டம் | இலக்கியத்திறனாய்வு | 5 | சுபகரி சுரேஸ்வரசர்மா | 3ம் |

# ENGLISH DAY COMPETITIONS - 2013

## ZONAL LEVEL

| Event | Grade | Name of Student | 1st | 2nd | 3rd |
|---|---|---|---|---|---|
| Copy Writing | 6 | M.Abinaya | | | ✓ |
| | 7 | R.Thulaxika | ✓ | | |
| | | V.Thanusharaga | | | ✓ |
| | 8 | S.Nilani | ✓ | | |
| | 9 | R.Dakshika | | ✓ | |
| | 10 | P.Abinaya | | | ✓ |
| | 11 | S.Keerththana | | | ✓ |
| | 12 | R.Jalani | ✓ | | |
| | | T.Nisharuja | | ✓ | |
| | 13 | T.Vithushana | | ✓ | |
| Dictation | 6 | K.Abinaya | ✓ | | |
| | | R.Sujani | | ✓ | |
| | 8 | J.Gowsika | | | ✓ |
| | 9 | N.Nithusha | | ✓ | |
| | 11 | N.Ramyah | ✓ | | |
| | 12 | S.Rohini | ✓ | | |
| | 13 | P.Tharsika | ✓ | | |
| | | T.Thagsha | | ✓ | |
| Creative writing | 6 | S.Abinaya | ✓ | | |
| | | N.Pamila | | ✓ | |
| | 8 | P.Viththaki | ✓ | | |
| | 9 | M.Mehala | | ✓ | |
| | 10 | B.Sowmiya | ✓ | | |
| | | S.Diluxana | | ✓ | |
| | 11 | B.Arani | ✓ | | |
| | | S.Sujeeva | | | ✓ |
| | 12 | B.Eluxana | | ✓ | |
| | 13 | K.Arththika | ✓ | | |
| Recitation | 6 | M.Abinaya | ✓ | | |
| | 10 | B.Sowmiya | ✓ | | |
| | 10 | S.Diluxana | ✓ | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Solo Acting | 13 | M.Mathuri | ✓ | | |
| | | S.Gowsiga | | ✓ | |
| Role Play | 6 | | ✓ | | |
| | 7 | | | ✓ | |
| | 8 | | | ✓ | |
| | 9 | | | | ✓ |
| | 10 | | | | ✓ |
| | 11 | | | ✓ | |
| Group singing | | Junior Song | | ✓ | |
| | | Senior song | ✓ | | |
| Drama | | | | ✓ | |
| News reading | 13 | S.Elveni | | ✓ | |
| Oratory (prepared) | 13 | S.Sharmila | ✓ | | |
| Oratory (impromptu) | 13 | K.Arththika | | ✓ | |
| Story telling | 6 | S.Jeyarajah | | | ✓ |
| | 7 | I.Sakiththiya | ✓ | | |
| | 8 | J.Sambavi | | ✓ | |
| | | P.Panuja | | | ✓ |
| | 9 | P.Thenuga | ✓ | | |

# PROVINCIAL LEVEL

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Role Play | 6 | | ✓ | | |
| Copy writing | 9 | R.Dakshika | | | ✓ |
| | 12 | R.Jalani | | | ✓ |
| Dictation | 6 | R.Sujani | ✓ | | |
| | | K.Abinaya | | ✓ | |
| | 9 | K.Nithusha | | | ✓ |
| Creative Writing | 10 | B.Sowmiya | ✓ | | |
| | | S.Dilaxana | | | ✓ |

# NATIONAL LEVEL

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Dictation | 6 | K.Abinaya | ✓ | | |

## சமூக விஞ்ஞானப் போட்டி – 2013
### வலய மட்டம்

| இல | தரம் | பெயர் | பெற்ற இடம் |
|---|---|---|---|
| 01 | 6 | T.அபிநயா | 2nd |
| 02 | 6 | S.அபிநயா | 3rd |
| 03 | 7 | P.அர்ச்சனா | 1st |
| 04 | 8 | Y.சாம்பவி | 3rd |
| 05 | 10 | R.தமிழரசி | 1st |
| 06 | 10 | S.டிலுக்சனா | 2nd |
| 07 | 10 | B.சௌமியா | 3rd |
| 08 | 11 | S.ஸ்ரீசங்கவி | 1st |
| 09 | 11 | K.மாதுளா | 3rd |

## Disaster Management Competition - 2013
### Zonal Level

| No. | Level | Name | Place |
|---|---|---|---|
| 01 | 01 | K.Abinaya | 3rd |
| 02 | 02 | M.Madusha | 1st |
| 03 | 02 | S.Shamni | 1st |
| 04 | 02 | K.Thivya | 3rd |
| 05 | 03 | K.Mathula | 1st |
| 06 | 03 | N.Manoja | 4th |
| 07 | 03 | R.Thamilarasy | 4th |

## Provincial Level

| | | | |
|---|---|---|---|
| 08 | 02 | M.Madusa | -- |
| 09 | 02 | K.Thivya | -- |

## கணிதப் புதிர்ப் போட்டி – 2013
### தமிழ்மொழி மூலம் - வலயமட்டம்

| | | |
|---|---|---|
| தரம் 10 | துசித்தா பொன்னுத்துரை | 2ம் இடம் |

## கணிதப் புதிர்ப் போட்டி – 2013
### ஆங்கிலமொழி மூலம் - வலய மட்டம்

| வகுப்பு | பெயர் | நிலை |
|---|---|---|
| தரம் 6 | சௌமியா அதியமான் | 2ம் இடம் |
| தரம் 10 | சங்கீதா ஆனந்தமூர்த்தி | 2ம் இடம் |
| தரம் 11 | லாவண்யா லோகநாதன் | 1ம் இடம் |

**கணித நாடகம் - மாகாணமட்டம் 2ம் இடம்**

## பருத்தித்துறை பிரதேச செயலகப் போட்டிகள் – 2013
### சிறுவர் தின விழா

| பெயர் | பிரிவு | நிகழ்ச்சி | நிலை |
|---|---|---|---|
| யதுர்சனா ஜெயராசா | கீழ்ப்பிரிவு | பேச்சு | 1ம் இடம் |
| சோவிகா செல்வகுமார் | மத்தியபிரிவு | கட்டுரை | 1ம் இடம் |

### முதியோர் தின விழா

| | | | |
|---|---|---|---|
| சிந்துஷா சாந்தகுமார் | கீழ்ப்பிரிவு | பேச்சு | 1ம் இடம் |
| துஷ்யந்தி பிரபாகரன் | மத்தியபிரிவு | கட்டுரை | 1ம் இடம் |
| துஷாந்தி சுதாகர் | மேற்பிரிவு | சிறுகதை | 1ம் இடம் |

## பருத்தித்துறை பிரதேச செயலகப் போட்டிகள் – 2013
### மாற்று வலுவாற்றல் தினம்

| பெயர் | பிரிவு | நிகழ்ச்சி | நிலை |
|---|---|---|---|
| வைஷ்ணவி சிவபாலன் | கீழ்ப்பிரிவு | பேச்சு | 1ம் இடம் |
| மாதுளா கிருஷ்ணசிங்கம் | மத்தியபிரிவு | கட்டுரை | 2ம் இடம் |

## வலயமட்ட திருக்குறள் மனனப் போட்டி – 2013

| பிரிவு | பெயர் | இடம் |
|---|---|---|
| கீழ்ப்பிரிவு | பவதாரணி ஈஸ்வரன் | 1ம் இடம் |
| மத்தியபிரிவு | யதுர்சனா ஜெயராசா | 2ம் இடம் |
| மேற்பிரிவு | நிஷோபா ஜெகநாதன் | 1ம் இடம் |

## உலக குடியிருப்புதினம் - 2013

தேசிய ரீதியில் ஆறுதல் பரிசு பெற்றோர் - சகிஷ்மனா சிவசந்திரபோஸ்
கோபிகா கோபாலவாணிதாசன்

## சுகாதார அமைச்சினால் நடாத்தப்பட்ட உலக உளநலநாள் - 2013

தேசிய ரீதியில் திறந்த கவிதைப் போட்டி - திவ்யா நடராஜன் 3ம் இடம்

## மாகாண அமைச்சினால் நடாத்தப்பட்ட மாற்று வலுவாற்றல் தினநாள் - 2013

சிறுகதைப்போட்டி மேற்பிரிவில் துஷாந்தி சுதாகர் 1ம் இடம்

## இரண்டாம் மொழி - சிங்களம் வலயமட்ட போட்டி முடிவுகள் - 2013

| | | | |
|---|---|---|---|
| வாசிப்பு | தரம் 6 | பிரயங்கதர்சினி மதிவதனன் | 1ம் இடம் |
| | தரம் 6 | வேணுகா ஸ்ரீநடராஜா | 3ம் இடம் |
| | தரம் 8 | துஜித்தா டொனால்ட் | 1ம் இடம் |
| | | சுவர்ணா சுரேஸ் | 2ம் இடம் |
| | தரம் 9 | றெமோனா சார்ஸ் லசாறிஸ், நிரோஜா.சி | |
| பேச்சு | தரம் 6 | தனுரா தயாபரன் | 1ம் இடம் |
| | | காருண்யா சுகுமாரன் | 3ம் இடம் |
| | தரம் 7 | தர்சனா ரவீந்திரன் | 3ம் இடம் |
| | தரம் 8 | சொப்னா சிவகுமார் | 2ம் இடம் |
| | தரம் 9 | மதுசா மலர்க்கண்ணன் | 1ம் இடம் |
| | | தனுசியா தயாநந்தன் | 2ம் இடம் |
| எழுத்து | தரம் 6 | பைரவி சேந்தன் | 1ம் இடம் |
| | | சுஜாந்தினி ரமேஸ் | 2ம் இடம் |
| | தரம் 7 | ராகவி கந்தசாமி | 1ம் இடம் |
| | | அர்ச்சயா புவனேந்திரராஜா | 2ம் இடம் |
| | தரம் 8 | கீர்த்திகா ஸ்ரீரங்கன் | 3ம் இடம் |
| | தரம் 9 | ஆஷிகா பிரகலாதன் | 1ம் இடம் |
| | | மதுசா மதன்மோகன் | 2ம் இடம் |
| குழுப்பாடல் | | | 2ம் இடம் |

## மாகாணமட்டம் 2013

வாசிப்பு தரம் 6 பிரியங்கதர்சினி மதிவதனன் 3ம் இடம்

## சர்வதேச நல்லொழுக்க தினம் – 2013

| பெயர் | பிரிவு | நிகழ்ச்சி | நிலை |
|---|---|---|---|
| வைஷ்ணவி சிவபாலன் | மத்தியபிரிவு | பேச்சு | 1ம் இடம் |
| சிந்துஷா சிவசோதி | இடைநிலைபிரிவு | பேச்சு | 2ம் இடம் |
| ஜினித்தா மகேஸ்வரன் | மத்தியபிரிவு | கவிதை | 2ம் இடம் |
| துஷாந்தி சுதாகர் | மேற்பிரிவு | கவிதை | 1ம் இடம் |

## விஞ்ஞான வினாடிவினாப் போட்டி – 2013

| தரம் | பங்குபற்றியவர் பெயர் | வலயமட்டத்தெரிவு | மாகாணமட்டத்தெரிவு |
|---|---|---|---|
| 6 | R.மாதுமை (E) | 3ம் இடம் | -- |
| 7 | P.நிருஷா (T) | 3ம் இடம் | -- |
| 8 | K.மாதங்கி (E) | 1ம் இடம் | -- |
| 9 | K.நிதுஷா (E) | 3ம் இடம் | 3ம் இடம் |
| | S.கோசலா (T) | 1ம் இடம் | 2ம் இடம் |
| 10 | K.மாதுமை (E) | 1ம் இடம் | 1ம் இடம் |
| | S.துளசிகா (E) | 3ம் இடம் | |
| 11 | S.சோவிகா (T) | 3ம் இடம் | |

**ஒலிம்பியாட் வலயமட்டப் போட்டியில் தெரிவாகிய மாணவி தரம் 8 வித்தகி புவனேந்திரம்**

# புலமைப்பரிசில் நிதியங்கள்

## கொழும்பு பழைய மாணவர் சங்க புலமைப்பரிசில் பெறுபவர் விபரம்

1) பல்கலைக்கழக அனுமதிக்காக முதலாம் தடவை தோற்றி சிறந்த விஞ்ஞான மாணவிக்குரிய கொழும்பு பழைய மாணவர் சங்க பொருளாளர் பழைய மாணவி இந்திராணி பாஸ்கரன் புலமைப்பரிசில் பெறும் மாணவி - சஜித்திரா திருக்குமரன்

2) கொழும்பு பழைய மாணவர் சங்கம் வழங்கும் முன்னாள் அதிபர் தேவமலர் அரியரட்ணம் புலமைப்பரிசில் பெறும் மாணவி - பபிதா விஜயகுமார்

3) பல்கலைக்கழக அனுமதி பெற்று கொழும்பு பழைய மாணவர் சங்க புலமைப்பரிசில் பெறும் மாணவி - சஜித்திரா திருக்குமரன்

# கனடா பழைய மாணவர்கள் சங்க புலமைப்பரிசில் பெறுபவர் விபரம்.

1. முன்னாள் அதிபர் றோஸ்மேரி சின்னையா ஞாபகார்த்த புலமைப்பரிசில் பெறும் சிறந்த கணிதப்பிரிவு மாணவி - ரம்மியா இரட்ணராஜா
2. முன்னாள் அதிபர் செல்வி மனோரஞ்சிதம் ஆறுமுகம் ஞாபகார்த்த புலமைப்பரிசில் பெறும் சிறந்த கலைப்பிரிவு மாணவி - சுபகரி சுரேஸ்வரசர்மா
3. முன்னாள் அதிபர் R.J.மான் ஞாபகார்த்த புலமைப்பரிசில் பெறும் வர்த்தகப்பிரிவு மாணவி மாதங்கி முருகேஸ்வரன்
4. முன்னாள் அதிபர் தேவமலர் அரியரட்ணம் ஞாபகார்த்த புலமைப்பரிசில் பெறும் பல்கலைக்கழகம் செல்லும் கணிதப்பிரிவு மாணவி - சுலோசினி சிவராமன்

## ஏனைய புலமைப்பரிசில் நிதியங்கள்

1. எமது பாடசாலையில் இருந்து முதல் தடவையாக பல்கலைக்கழகம் சென்ற மூவரில் ஒருவரான முன்னாள ஆசிரியை திருமதி.பாக்கியலட்சுமி சபாபதி (செல்வி.ப.ஆழ்வாப்பிள்ளை) ஞாபகார்த்த புலமைப்பரிசில் பெறும் மாணவி - சிந்துஜா கிருஷ்ணகுமார்
   இதனை வழங்குபவர் அவரது புதல்வன் திரு சாம் ஜெயச்செல்வன் (கொழும்பு)
2. ஓய்வுநிலை பிரதி அதிபர் செல்வி தனலட்சுமி வேலுப்பிள்ளை அவர்களின் புலமைப்பரிசில் பெறும் மாணவர்கள்.

| | | | |
|---|---|---|---|
| டிவின்சியா யோகராஜா | - தரம் 7 | கன்சா இராமகிருஷ்ணன் | - தரம் 8 |
| பிருந்தா விக்னேஸ்வரன் | - தரம் 9 | தனுஜா முருகதாஸ் | - தரம் 10 |
| நிவேதிகா இராகவன் | - தரம் 11 | ஜெயசீலா ஜெயசங்கர் | - தரம் 12 |
| ஜனனி திருமால் | - தரம் 13 | | |

3. முன்னாள் சிரேஷ்ட மாணவத் தலைவி செல்வி பத்மினிதேவி இராசேந்திரம் 1963 / 1964 ஞாபகார்த்த புலமைப்பரிசில் பெறும் கலைப்பிரிவு மாணவி - தர்மிலா சிவராசா
4. பழையமாணவி செல்வி திலகவதி பெரியதம்பி வழங்கும் புலமைப்பரிசு பெறும் சிறந்த விஞ்ஞானப்பிரிவு மாணவி - சஜித்திரா திருக்குமரன்
5. பழையமாணவி செல்வி திலகவதி பெரியதம்பி வழங்கும் புலமைப்பரிசில் பெறும் சிறந்த கணிதப்பிரிவு மாணவி - ரம்மியா இரட்ணராஜா
6. முன்னாள் பிரதி அதிபர் திருமதி குணமணி இராஜரட்ணம் ஞாபகார்த்த கிறிஸ்தவபாட புலமைப்பரிசில் பெறும் மாணவி.
   லக்ஷிகா மைக்கல்ராஜ்குமார் , நிந்துஜா சிவபாதம் ,
   ஜீவதா ஸ்ரீரங்கன் , பிரியதர்சினி அன்னலிங்கம்
7. முன்னாள் வர்த்தகபாட ஆசிரியை திருமதி கௌரி சந்திரலிங்கம் ஞாபகார்த்த புலமைப்பரிசில் பெறும் மாணவிகள் - சோபிகா செல்வகுமார்
8. முன்னாள் நடன ஆசிரியை திருமதி புவனேஸ்வரி வன்னியசிங்கம் ஞாபகார்த்த புலமைப்பரிசில் பெறும் மாணவி - ரம்மியா நாகேஸ்வரன்
9. முன்னாள் அளவையியல் ஆசிரியை திருமதி இந்திரா கிருஷ்ணகுமார் ஞாபகார்த்த புலமைப்பரிசில் பெறும் மாணவி - சங்கீதா செல்வக்குமார் , சுபஹரி சுரேஸ்வரசர்மா
10. முன்னாள் வர்த்தக ஆசிரியை திரு.C.A.தேவச்சந்திரன் ஞாபகார்த்த புலமைப்பரிசில் பெறும் மாணவி - மாதங்கி முருகேஸ்வரன்
    இதனை வழங்குபவர் திரு.திருமதி தேவச்சந்திரனின் புதல்வி திருமதி.ம.யோகேந்திரன்

11. முன்னாள் பழையமாணவி திருமதி.வ.இராதாகிருஷ்ணன் ஞாபகார்த்த புலமைப்பரிசில் பெறும் மாணவி :

சோபிகா செல்வகுமார் , நிவேதா உயதராஜன்
சுஜீவா ஸ்ரீபவன் , திவேந்தினி இராஜேந்திரன்

12. ஆசிரியை திருமதி வாசுகி அரவிந்தன் புலமைப்பரிசில் பெறும் மாணவிகள்.

சுபகரி சுரேஸ்வரசர்மா , பிருந்தா சந்திரகுமார்
சிந்துஜா கிருஷ்ணகுமார் , கிரியந்தி அருண்மொழி

13. முன்னாள் ஆசிரியை திருமதி ஜோன்பிள்ளை ஞாபகார்த்த பரிசுகளைப் பெறுபவர்கள் :

எமது பாடசாலை தேசிய மட்டத்தில் வெற்றி பெற்ற கபடி வீராங்கனைகள்
இதனை வழங்குபவர் அவரது மகள் செல்வி நேரா ஜோன்பிள்ளை

14. ஓய்வுநிலை அதிபர் திருமதி லீலாவதி சந்திரசேகரம் அவர்களால் வழங்கப்படும் வெற்றிக் கேடயங்களைப் பெறும் சகலதுறை மாணவிகள்.

O/L திவேந்தினி இராஜேந்திரன்
A/L விதுசனா தங்கராசா - விஞ்ஞானப்பிரிவு
A/L தர்மிலா சிவராஜன் - கலைப்பிரிவு

15. திரு.திருமதி பரமலிங்கம் ஞாபகார்த்த புலமைப்பரிசில் பெறும் மாணவிகள் :

சந்திரிக்கா ஐங்கரதாஸ், மயூரி சிவகுமார்
இதனை வழங்குபவர் அவரது புதல்வி திருமதி.அ.சுகுமாரன்

## 2014இல் பாடசலைக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்காகவும் பாடசாலையின் பிற தேவைகளுக்காகவும் அன்பளிப்புச் செய்த நல்லுள்ளங்களின் விபரம்.

1. பாடசாலையின் முன்றலை அழகுபடுத்தவென பூச்சாடிகளை அன்பளிப்புச் செய்தோர்
   பருத்தித்துறை மகாலட்சுமி உரிமையாளர் பொ.இராசதுரை
   பருத்தித்துறை ஜெயகணேசா உரிமையாளர் க.தங்கராசா
   மந்திகை மனோகரன் ஹாட்வெயாஸ் உரிமையாளர் மனோகரன்
   நெல்லியடி சிதம்பரப்பிள்ளை பொத்தகசாலை உரிமையாளர் S.சிதம்பரப்பிள்ளை

2. பாடசாலையின் அபிவிருத்திக்கென ரூபா 10000/- வழங்கிய பழைய மாணவி **Dr.R.**மலர்வதனி

3. "மஹிந்தோதய" தொழினுட்ப பீடத்திற்கான அடிக்கல் நாட்டியமைக்கான கல்வெட்டுக்கான அன்பளிப்புச் செய்தவர் திரு.V.கிருஷ்ணசிங்கம் (S.D.C செயலாளர்)

4. ஜனா ஒப்பந்தகாரர் - அறிவித்தற்பலகை

5. செல்வி றஜிதா சிவனேசன் (பழையமாணவி) - அறிவித்தற் பலகை

6. திருமதி ரவீந்திரா (கனடா) - பிரதி அதிபர் பெயர்ப்பலகை

7. திருமதி பார்த்திமா அந்தோனிப்பிள்ளை (கனடா) - நீர்ப்பம்பி

******